**நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தின் (“நிறுவனம்”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது

தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,152,164 ஆன கடன்பட்டோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகள் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் கம்பனிகளில் நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக பெறவேண்டிய தொகையினையே பிரதி நிதித்துவப்படுத்துகின்றது. சில அரசாங்க நிறுவனங்கள் தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் காணப்படவில்லை. இது தொடர்பாக மீண்டும் பகுப்பாய்வை மேற்கொண்டு | கடன்பட்டோர் மீதி பகுப்பாய்வினை மேற்கொண்டு அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறவிடக் கூடிய மீதிகள் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) நிறுவனம் மூலம் வெளித்தரப்பினருக்காக மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் பாடநெறிகளுக்கான கட்டணங்களுக்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய ரூபா 2,469,031 அறவிடப் பட்டிருக்கவில்லை. | பட்டியல்களுக்காக கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக மீள் நினைவூட்டல் மூலம் உரிய சேவை பெறுநர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கூடிய விரைவில் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உரிய ஆண்டில் பூர்த்தி செய்யப்பாட செயற்திட்டமாக பிற்போட்ட வருமானக் கணக்கில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 792,500 ஆன 10 மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை பிற்போட்ட வருமானமாக குறிப்பிடப்பட்ட பெறுமதியாக இருந்ததுடன் நிறுவனம் மற்றும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தாமையின் அடிப்படையில் அறவிட முடியாதிருந்த, பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் முன்வராத மற்றும் இரத்துச் செய்ய வேண்டிய பட்டியல்களின் மீதியாகும். | உரிய தரப்பினரிடம் விசாரணை செய்து மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப் பிரமாணம் 134(1) | பிரதி பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு) இனால் சிரேஸ்ட பிரதிப் பணிப்பாளர் (நிதி) | பிரதிப் பணிப்பாளர் (நிதி) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டி | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளரின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதவியில் 2020 ஆம் ஆண்டு முதல் பதிற்கடமை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த பதிற் கடமை உள்ளகக் கணக்காய்வாளர் பதவி சுயாதீனமானதா என்பது தொடர்பில் அதிக தாக்கம் ஏற்படுத்தும் விடயமாகும். | இருந்தமையால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்தப் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உத்தியோத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 371(2) | செயல் நிமித்த உபகட்டு நிதி பதவி நிலைத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் பதவி நிலை அல்லாத உத்தியோத்தியோகத்தர்களுக்கும் 63 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2,357,200 செயல் நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற பதவியணியினரின் வெற்றிடம், பல்வேறு தேவைகள் மற்றும் பதவியணியினரை அவசர தேவையின் அடிப்படையில் பதவி நிலை அற்ற உத்தியோகத்தர்களுக்கும் விநியோகிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும் எதிர்காலத்தில் சகல நேரங்களிலும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் கட்டுநிதி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உபகட்டுநிதி வழங்ப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 756(2)(அ) | மெய்மையாய்வு சபையில் உள்ளடக்க வேண்டிய இரண்டு பேர்களை உடையதாக இருக்க வேண்டிய போதிலும் நிறுவனம் ஒரு மெய்மையாய்வு சபைக்காக 05 பேர்களை உள்ளடக்கும் வகையில் நியமித்திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளுக்காக 33 அங்கத்தவர்களுக்காக | நிறுவன கட்டமைப்பு மற்றும் பொருட்களின் தன்மை, இயலளவு, தொழில் நுட்ப தேவை போன்ற பல்வேறு காரணங்களையும் கவணத்தில் கொண்டு ஆகக் குறைந்த துஐந்து பேர்களுடைய மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டிருந்தது. பணிகளை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நிருவாக சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆகக் கூடியது 21 நாட்களின் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மெய்மையாய்வு சபை நியமித்து கொடுப்பனவுகளை செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 416,850 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பின் நாளாந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,433,105 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 31,554,058 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,120,953 வீழ்ச்சி காணப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செயற்திட்ட வருமானம் ரூபா 13,546,295 இனால் அதிகரித்திருந்த போதிலும் பாடநெறி வருமானம் ரூபா 14,443,475 இனாலும், அரசாங்க மானியம் ரூபா 8,551,600 இனாலும் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | Tea colour sorting இயந்திரம் உற்பத்திக்காக ரூபா 13,171,672 செலவினம் செய்யப்பட்டிருந்த போதும் செயற்படுத்துவதற்குத் தேவையான Field Programmable Gate தொழில் நுட்பம் காணப்படாமையின் காரணமாக சந்தையில் வெளியிடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தமையால் செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | செயற்திட்டத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக விலகிச் சென்றமையினால் தொடர்ச்சியாக புதிய பொறியியலாளர்கள் மற்றும் உதவி பொறியியலாளர்கள் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உபகரணம் பயிற்சியுடன் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. உற்பத்தி சந்தைக்கு வழங்குவதற்காக ஆர்வம் காண்பிக்கின்ற தரப்பினர் தொடரபாக கலந்துரையாடல் வேண்டும். | செயற்திட்டத்தை குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டங்களின் தன்மையின் பிரகாரம் காலத்திற்குக் காலம் பயன்படுத்துவதற்கான தேவையின் அடிப்படையில் 05 வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் பேணிச் | இருப்பு விடயங்கள் அதிக அளவில் இலத்திரணியல் விடயங்களாக இருந்ததுடன் அது செயற்திட்டங்களின் தன்மையின் பிரகாரம் காலத்திற்கு காலம் | அசைவுறாத இருப்புக்களைப் பயன்படுத்துவற்கோ அல்லது பகுப்பாய்வு செய்து விற்றுத் தீர்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| செல்லப்படுகின்ற ரூபா 2,518,049 பொருட் பதிவேட்டு விடயங்கள் ரூபா 199,218 துணைப்பாகங்கள் மற்றும் ரூபா 1,392,997 ஆன உபகரணங்களும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,110,264 பெறுமதியான அசைவுறாத இருப்புக்கள் காலாவதியாவதற்கு முன் பயன்படுத்துவதற்கான படிகளில் பயன்பாடுள்ள பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படுகின்றது. அந்த தொழில் நுட்ப மற்றும் இலத்திரணியல் விடயங்கள் தற்போது சந்தையில் கொள்வனவு செய்வதற்கு ஏற்படுமாயின் அதனை விட அதிக விலை கூடிய பொருட்களாக உள்ளது. | வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நூலகம் சுயமாக இயங்கும் முறைமைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,375,400 பெறுமதியான 02 துணைப்பாகங்கள் பொருத்தப்படாமல் 2018 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 17,348,222 பெறுமதியான உலக அளவிடல் முறைமை 2022 ஆம் ஆண்டில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | நூலகம் MIS முறையில் செயற்படு நிலைமை சுயமாக செயற்படுத்தும் மொடியூலைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கூறப்பட்ட விடயம் பயன்படுத்தப்பட்டதுடன் அந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான “system firmare மற்றும் “library database system” இற்காக உள்நாட்டு மென்பொருள் மேம்படுத்துனருடன் கலந்துரையாடப்பட்ட போது நிதியம் வரையறுக்கப்பட்டதன் காரணமாக முன்கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது. 2015 ஆம் ஆண்டில் 15D பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட Illumina clus உலோக அளவிடல் முறைமையின் சில பகுதிகள் 2022 ஆம் ஆண்டில் அவ்வப்போது செயலிழந்திருந்தது. சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்காக முன்மொழிவு ஒன்றுடன் அறிக்கை ஒன்று 2024 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய உபகரணங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொல்பொருளியல் திணைக்களத்திற்காக தொல்பொருளியல் படிவுகள் மற்றும் அகழ்வு நடவடிக்கைகளுக்காக நிழற்படங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,564,677 ஆன விமானம் ஒன்று செயற்படுத்துவதற்கு ரூபா 110,320 தொகை செலவிடப்பட்டிருந்தது. அற்காக தேவையான பயிற்சி மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்குத் தேவையான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து உரிய பணிக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்று வைக்கப்பட்டதன் அடிப்படையில் செலவிட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | பல்வேறு துறைகளில் அபிவிருத்தி செயற்திட்டங்களில் செய்மதி படங்களுக்கான மாதிரிகளாக நிழற்படங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட ஆகக்கூடிய எல்லை 150 மீற்றர் (492 அடி) அங்கீகாரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. ஆகக் கூடிய உயரம் மீற்றர் 60 (200 அடி) எல்லைப்படுத்த வரையறுக்கப்பட்டமையால் அதை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியாதிருந்தது. 2022 இல் உயரம் 400 அடியாக புதிய சட்ட வழங்கல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் திட்டமிடப்பட்ட முறைமைக்குரிய மென்பொருளில் வழுக்கள் இனங் காணப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | தேவை மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குள்ள இயலுமை தொடர்பாக சரியான ஆய்வினை மேற்கொண்ட பின்னர் பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டி இருந்ததுடன் இந்த விமானத்தை பயன்படுத்துவற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தில் 177 ஆன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 95 வெற்றிடங்கள் அதாவது 54 சதவீதம் வெற்றிடமாக இருந்ததுடன் வெற்றிடங்களில் 56 சதவீதமும் நிறுவனத்தின் பிரதான பணிகள் தொடர்பான தொழில் நுட்பத் தொகுதியில் உள்ள வெற்றிடங்கள் ஆகும். | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் கேட்டு விலகிச் சென்றதுடன் சில சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒய்வுபெற்றுச் சென்றிருந்ததனால் தொழில்நுட்ப தொகுதியின் பதவிகளுக்காக பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதும் | வெற்றிடங்களில் அத்தியாவசிய பதவியணியினரை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தகமை உடைய விண்ணப்பதாரர்கள் முன்வராமையினால் 2019 முதல் 2024 வரை புதிய ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தும் சுற்றறிக்கை விநியோகித்ததன் காரணமாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 11 உப செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் திட்டமிடப்பட்ட 11 செயற்பாடுகளையும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கும் அடையப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ள முடியாத 22 செயற்பாடுகள், 5 பெறுகைகள், 17 தொழில் நுட்ப செயற்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் ஆகும். மூலதன பெறுவனவுகளின் வரையறைகளின் காரணமாக 05 பெறுகைகள் முழுமையாக மேற்கொள்ள முடியாதிருந்தது. செயற்திட்டம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 17 இல் 06 மாத்திரம் மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் 04 இல் கவனத்தில் கொள்ளக்கூடிய செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கும் 07 இல் அதே வகையில் செயல் முன்னேற்றத்தை பெறக்கூடியதாகவும் இருந்தது. | நடைமுறை நிலைமையினைக் கவனத்தில் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டி இருந்ததுடன் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |